# பாடசாலை நாடகம்

(கட்டுரை)

ஏ. ரி. பொன்னுத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நாடகம்

ஏ. ரி. பொன்னுத்துரை பீ. ஏ.

வெளியீடு :
குரும்பசிட்டி, சன்மார்க்க இளைஞர் சங்கம்
1973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்மார்க்க சபை
சன்மார்க்க இளைஞர் சங்க வெளியீடு

விலை ரூபா : 2-00

# பாடசாலை நாடகம்

ஆசிரியர் :
ஏ. ரி. பொன்னுத்துரை பீ, ஏ.

வெளியிடுபவர் :
சன்மார்க்க இளைஞர் சங்கம்
குரும்பசிட்டி
தெல்லிப்பழை

அச்சுப்பதிப்பு :
சக்தி அச்சகம்
ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு, கல்வியமைச்சிற் கல்வியதிகாரியாக
பணிபுரியும் திரு. இர. சிவலிங்கம் M. A. அவர்கள் வழங்கிய

# முன்னுரை

நம் நாட்டிலேயுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் ஆண்டொன்றிற்கு ஏறக்குறைய ஆயிரம் நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன என்பது எனது அனுமானம். கல்வி அமைச்சின் தமிழ்த்தின விழா, இலங்கைப் பண்பாட்டுக் குழுவின் நாடகப் பிரிவினர் நடாத்தும் நாடகப் போட்டி ஆகியவற்றிலும், வேறு பல்வகைப் போட்டிகளிலும், பாடசாலை விழாக்களிலும் தமிழ் நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன. நாடகம் கல்விபுகட்டும் முறைகளில் ஒன்றாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆதலின் பாடசாலை நாடகங்கள் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்தன. பெரும்பாலான பாடசாலை நாடகங்களிற் பங்குபற்றும் மாணவ, மாணவியரும், பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் இத்துறையில் அனுபவம் குறைந்தவர்கள். நாடகத்துறையில் அனுபவமிகுந்த ஆசிரியர்கள் தமது அனுபவத்தாலும், கல்வியாலும் பெற்ற அறிவினை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதன் மூலம் பாடசாலை நாடகங்களின் தரத்தை உயர்த்துவதற்கு வழிகோலலாம். இப்பணியின் முன்னோடியாக நாடகங்களை எழுதி, நடித்து, அரங்கேற்றிப் புகழ்பெற்ற நண்பர் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள் இந்நூலின் வழியாக தமது அனுபவத்தையும், அறிவையும் மற்றையோரோடு பகிர்ந்துகொள்ள முன்வந்திருப்பது பெரிதும் பாராட்டுக்குரியதும், வரவேற்கத்தக்கதுமாகும்.

நண்பர் பொன்னுத்துரை நல்ல நடிகர்; நாடகாசிரியர்; இயக்குநர். தேவைக்கேற்றவாறு நாடகங்களை அமைப்பதில் வல்லுநர். நாடகத்துறையிலே பேரார்வமும், ஆழ்ந்த அனுபவமுமிக்கவர். நாடகமென்பது சினிமாவின் பிறிதொரு தோற்றம் எனும் பொருந்தாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றை முற்றாக நிராகரிப்பவர்: தமிழ் நாடகங்களை மட்டுமல்ல, பிறமொழி நாடகங்களையும் உன்னிப்பாக ஆராய்ந்து குறைகளைக் களைந்து, நிறைகளைப் பெருக்குபவர். நாடக இயல் பற்றிய பல நூல்களைக் கற்றவர். ஆசிரியத்தொழிலில் ஈடுபட்டிருப்பவ ராகையால், மாணவர்களின் உளப்பாங்கு, கல்வியின் குறிக்கோள், பாடசாலையின் இயல்புகள் ஆகியவற்றிற்கு முரண்பாடின்றி செவ்விய நாடகங்களை அரங்கேற்றல் வேண்டுமென்ற குறிக்கோளைப் பூண்டவர். அவ்வழி நின்று வெற்றிகள் பல நிலைநாட்டியவர். அவர் இந்நூலை இயற்றுவதற்கு முற்றும் பொருத்தமுடையவர்.

தமிழில் இத்தகைய நூல்கள் நிறைய வெளிவர வேண்டும். எல்லா நூல்களும் ஆழ்ந்த இலக்கிய ஆய்வுகளாகவோ, அன்றி இலக்கியச்சுவை நிறைந்தனவாகவோ, நெறிபுகட்டுவனவாகவோ அமைதல்அவசியமில்லை. இன்று நமது தேவைகளுக்கேற்ற பல நூல்கள் வெளிவரல்வேண்டும். பாடசாலை நாடகங்களை இயற்றுதல், இயக்குதல் பற்றிய நூல் இன்றைய தேவைக்கு ஏற்ற ஒன்றாகும். இந்நூல் நமது அடிப்படைத் தேவை ஒன்றினைப் பூர்த்தி செய்கின்றது. இதன் அடியொற்றி மேலும்பல நூல்கள் வெளிவரல் வேண்டுமென்பது எனது அவா. இச் சிறு நூலில் பாடசாலை நாடக அமைப்பின் பல்வேறு கோணங்களையும் ஊன்றி நோக்கித் தமது கருத்துக்களைச் சுவை படக் கூறியுள்ளார் நண்பர் பொன்னுத்துரை. பாடசாலை நாடகத் தயாரிப்புப்பற்றிய குறிப்புக்களைச் சேர்த்ததோடல்லாமல் ஒரு 'மாதிரி' நாடகத்தையும் வெளியிட்டிருப்பது இதன் பயனைப் பன்மடங்காக்கியுள்ளது.

இந்நூல் இன்னும் விரிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது என் கருத்து. இந்நூலுக்கு நல்கும் வரவேற்பின்மூலம், இது இன்னும் விரிவான நூலாய் வெளிவருவதற்கு நாடகப் பிரியர்கள் வழிவகுப்பார்கள் என்பது எனது நம்பிக்கை.

கல்வி அமைச்சு, இர. சிவலிங்கம்
கொழும்பு-2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலம், 'நாடகம் எழுதுதல்' என்ற தலைப்பில் ஓர் அரிய கருத்தரங்கை, 1966ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கொழும்பு றோயல் கல்லூரியில் நடாத்தியது. 'பாடசாலை நாடகம்' என்ற பொருள் பற்றிய கட்டுரையைச் சமர்ப்பித்து, கலந்துரையாடலிலும் முக்கியபங்கு கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. காலஞ்சென்ற பிரபல எழுத்தாளர் அ. ந. கந்தசாமி அவர்கள் 'தரமான கட்டுரை இது' என மெச்சியமையால் ஏற்பட்ட உத்வேக உணர்வு சிறிய வடிவிலாயினும் இதை நூலுருப்பெறச் செய்யவேண்டும் என்ற துணிவை உருவாக்கியது. புதிதாக இத்துறையில் கால் வைக்கமுனைபவர்களுக்குக் காத்திரமான கருத்துக்களை முன்வைத்தால் அது பயன்தரவல்லது என்ற நினைவும் என்னை உந்தியது. இதன் விளைவே இச்சிறுநூல்.

'சிறிது விரிவுபடுத்தி நூலை வெளியிடுதல் நல்லது எனப்பல நண்டர்கள் ஆலோசனை கூறினர். அதன்படி சில தயாரிப்புக் குறிப்புக்களையும் மேல்வாரியாகச் சேர்த்துள்ளேன். 'தயாரிப்பு' பற்றிய பிறிதொருநூல் வெளியிடும் நோக்கில், இப்பகுதியை விபரிக்கவில்லை. சமூக நாடகம்தான் இன்றைய முக்கியதேவை என்ற கருத்துடையேனுயினும், 'வீரமுரசு' என்றபரிசுபெற்ற இலக்கிய நாடகத்தை இணைத்துள்ளேன். மாணவர் நிலையில் சரித்திர, இலக்கிய நாடகங்களும் பயன்தரவல்லன என்ற கருத்தை ஒரு அளவில் ஏற்றேயாக வேண்டும்.

ஈழத்தின் தலைசிறந்த பேச்சாளரும் தரமான கலை இலக்கிய கட்டுரைகள்மூலம் எழுத்துலகில் தனியிடத்தை பெற்றிருப்பவரும் கல்வி அமைச்சை சேர்ந்த, கல்வி அதிகாரியுமாகிய - எனது நண்பர் இர. சிவலிங்கம் M. A. அவர்கள் எனது வேண்டுகோளுக்கிணங்கி முன்னுரை தந்துதவியமைக்காக என் பணிவானநன்றி.

இனி.........வாசகர்களும் இச்சிறுநூலும்.

ஏ. ரி. பொன்னுத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நாடகம்

தமிழர்களின் தலையாய முதுசொத்து கலைகள். அவைகள் இன்றேல் நமக்குப் பெருமையேது? புகழேது? புவிமக்கள் மத்தியில் இடம்தானேது? கலைகளை வளர்க்க, அவற்றைக் கட்டிக் காக்க, உயிரிலும் மேலாக மதிக்க முன்னின்றது நமது தமிழ் இனம். பாமரர்கள் மட்டுமன்றி முடியுடை வேந்தர்களும் முன்னணியில் நின்றனர் கலைத் தொண்டுபுரிய. கலைக்கூடங்களாய் மிளிர்ந்த ஆலயங்களுக் கணித்தாய் ஆண்டுதோறும் நாடகங்கள் மேடையிடப்பட்டன. ஆயிரம் ஆயிரமாய் மக்கள் திரண்டு இரசித்து மகிழ்ந்தனர். இதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. இவ்விதம், பொன்னெனப் பேணப்பட்ட நாடகக் கலை, சமணமதத் தலையீட்டால் இடைக்காலத்தே தேக்க நிலையுற்ற தென்பது உண்மை. ஆனுல், இன்று மக்கள் மத்தியில் இத்துறைபற்றிய ஒரு விளிப்புணர்ச்சியை - புதிய ஊக்கத்தை - ஆக்கபூர்வமானவற்றை செயல்படுத்துவோம் என்ற துடிப்பைக்காண ஒளிநிரம்பிய எதிர்காலம் உண்டு என்ற சிந்தனை எழத்தான் செய்கிறது. எதிர்காலத்தில் இத்துறை வளர்ந்தோங்க இளம் உள்ளங்களில் நாடகத்தில் அசையாத ஒரு நாட்டத்தை உருவாக்க வேண்டியது எமது கடனுகின்றது. நாடகங்களில் அவர்களை ஈடுபடுத்தி அக்கலை பற்றிய நுணுக்கங்கள் பலவற்றை முறைப்படி அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். இக் கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணோட்டத்தில் பார்க்கும்போது பள்ளி நாடகங்கள் முக்கியத்துவமானவை என்பதை உணரமுடிகிறது.

## பாடசாலை நாடக நோக்கங்கள்

கல்வி போதிக்கும் முறைபற்றி ஆராய்ந்த பல உளவியலாளரும், கல்வித்துறை வல்லுநரும், மாணவர்களுக்கு இலக்கிய, சமய, சரித்திர அறிவுகளை நாடகங்கள் மூலம் இலகுவாகப் புகுத்திவிடலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். எனவே அறிவு வளர்ச்சியைப் பொறுத்த மட்டிலும் பள்ளி நாடகங்கள் கணிசமானஅளவு பயன்படுகின்றன. வருங்கால நாடக வளர்ச்சி, மாணவர்கள் அறிவு வளர்ச்சி ஆகிய இரு முக்கிய நோக்கங்களைப் பூர்த்திசெய்வதில் பள்ளி நாடகங்கள் பெரிதும் உதவுகின்றன.

பாடசாலைகளில் நாடகங்கள் பற்பல சந்தர்ப்பங்களில் மேடையிடப்படுகின்றன. பெற்றோர் விழா, பரிசளிப்பு விழா, இல்லங்களுக்கிடையே நடைபெறும் போட்டி, பாடசாலை நிதி திரட்ட நடாத்தப்படும் நாடக விழா, தவணை முடிவுகளில் இடம்பெறும் கதம்பவிழா போன்ற சந்தர்ப்பங்களில் பலவிதமான நாடகங்கள் தேவைப்படுகின்றன. அவை முழுநீள நாடகமாய் அமையலாம்; சிறு நாடகமாய் அமையலாம்; அன்றி ஓரங்க நாடகமாயும் இருக்கலாம். எனவே பாடசாலைப் பிள்ளைகள் நடிப்பதற்கென அவர்களது வயது, தகுதி, மனோபக்குவம் போன்ற பலவற்றை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்கள் எழுதும்போது கருத்தில் இருத்த வேண்டும்.

## கதைக் கருவின் முக்கியம்

ஒரு நாடகத்தின் வெற்றி பெரும்பாலும் அது அடக்கியிருக்கும் கதைக் கரு, அதைச் சுற்றிச் சுழன்றுவரும் சம்பவங்கள், அதில் நடமாடும் பாத்திரங்கள் என்பவற்றில் தங்கியிருப்பினும் முக்கியமாகக் கரு (Theme) பற்றி பள்ளி நாடக எழுத்தாளன் கூடிய கவனம் செலுத்தவேண்டும். வளர்ந்தவர்கள் நடிக்கும் அல்லது நாடகத்தையே தொழிலாக உடையவர்கள் பங்குகொள்ளும் நாடகங்களில் கருப்பொருள் எதுவாகவும் அமையலாம். பாலுணர்வை ஊட்டத்தக்க கருவை அடியொற்றியும் அவர்கள் நாடகம் நடாத்தலாம். தியாக உணர்வை வலியுறுத்தியும் நாடகம் நடாத்தலாம். ஆனல் பள்ளி நாடகங்கள் எழுதும்போது மிகக் கவனமாக இருத்தல்வேண்டும். கள்ளங் கபடமற்ற மாணவ மலர்களைக் களங்கப்படுத்தும் வகையில் கதைக் கருவை அமைக்கக் கூடாது. விரசக் கருவுடைய நாடகங்களைப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பள்ளிச் சிறுர்கள் வரவேற்க மாட்டார்கள்.

எனவே நாடகத்தைத் தொழிலாக உடையவர்களுக்கு இருக்கும் சுதந்திரம் பள்ளி நாடகங்களைப் பொறுத்தவரை இல்லை. பண்பான பிரஜைகளை உருவாக்குவது கல்வியின் நோக்கங்களுள் தலையாயது. எனவே பள்ளி நாடக எழுத்தாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள் நுனியில் நடப்பதுபோல மாணவர்களின் உளவளர்ச்சிக்கு - பண்பாட்டு வளர்ச்சிக்குக் குந்தகம் செய்யாத வகையில் கருவை அமைத்துக் கொள்ளவேண்டியவனுகின்றுன்.

## பள்ளி நாடக எழுத்தாளன் கவனிக்க வேண்டியன

நாடகங்களில் பல்வேறு சம்பவங்கள் விரவியிருக்கும். அவை பல்வேறு சுவைகளைப் பிரதிபலிப்பதாகவு மிருக்கும். ஆனுல் பள்ளி நாடகங்களை எழுதும் போது எப்படிப்பட்ட சுவைகள் தொக்கு நிற்கத்தக்கதாய் சம்பவங்கள் இருக்க வேண்டுமென்பதை எழுத்தாளன் நன்குணரவேண்டும். வீர உணர்வு பீறிடும் சம்பவமோ, கருணை சம்பந்தமான காட்சியோ, அவலக் கட்டமோ, பள்ளி நாடகத்தை அருவருக்கச் செய்யமுடியாது. ஆனுல் காமம், காதல் சம்பந்தமான காட்சிகளுக்கு அழுத்தம் கொடுத்து நாடகம் எழுதப்படுமானுல் அவை பள்ளி நாடகம் என்ற கண்ணேட்டத்தில் பார்க்கப்படும்போது அருவருப்பையே கொடுக்கும். சமீபத்தில் ஒரு பாடசாலை நாடகம் பார்க்க நேர்ந்தது. அந்த நாடகத்தில் இடம் பெற்ற காட்சிகளில் ஒரு பெண்ணை ஒரு வாலிபன் காமவெறி கொண்டு வற்புறுத்துவது, கடத்த எத்தனிப்பது, கூடிக்குடிப்பது, மங்கையர்களுடன் நடனமாடுவது போன்றவை முக்கியமாய் இடம்பெற்றன. படுக்கையறைக் காட்சியைக்கூடக் காட்ட அந்தப் பள்ளி நாடக எழுத்தாளா எத்தனித்தார். இப்படிப்பட்ட காட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகளைக் கண்ட இரசிகர்கள் இந்த நாடக எழுத்தாளருக்காகப் பரிதாபப் பட்டார்கள். இதைத் தொடர்ந்த 'கற்பின் செல்வி' என்ற சிறு நாடகத்தைப் பார்த்து வியந்தார்கள். பொற்கொல்லனின் வஞ்சகம் - கோவலனின் அவல முடிவு - பாண்டியன் அரண்மனையில் கண்ணகியின் குமுறல் - குற்றமுணர்ந்து நீதிக்காக மடிந்த மன்னன் - அவனைப் பின்தொடர்ந்த அரசி இப்படியான சம்பவங்களைப் புனிதமான முறையில் தொகுத்தமைத்த எழுத்தாளரைப் பாராட்டினார்கள். இதிலிருந்து நாம் உணரவேண்டிய உண்மையொன்றுண்டு. பள்ளி நாடகங்களில் இடம்பெறும் சம்பவங்கள் பெரும்பாலும் பள்ளி மாணவர்களின் வயதுக்கும் மனோநிலைக்கும் அப்பாற்பட்டதாக, பாலுணர்வை ஊட்டத்தக்கதாய் அமையவே கூடாதென்பதாகும். மாணவர்களின் உளவிருத்திக்கு உதவுபவையாக அமைவதே வரவேற்கத் தக்கதாம். காதல் காட்சி தவிர்க்க முடியாத ஒன்று எனக் கண்டவிடத்தும்கூட அதைக் கோடி காட்டும் வகையில் புனிதமாக அமைத்து விடலாம்.

## நாடகப் பிரதிகளில் உள்ள குறைகள்

பள்ளி நாடக எழுத்தில் அநுபவமில்லாதவர்கள் நாடகம் எழுதுவதினால், நாடகத் தயாரிப்புக்கு அவர்களது சிருஷ்டிகள் எடுபடுவதில்லை. சிலர் சில காட்சிகளை ஒருசில நிமிடங்களில் நடப்பதாய்க்கூட எழுதிவிடுகின்றனர். ஒவ்வொரு காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் குறைந்த பட்சம் பத்து நிமிடங்கள் வரையி லாவது அமையவேண்டுமென்ற கருத்தையே அலட் சியம் செய்கிறுர்கள். நாடகம் தாமதமின்றி ஓடக்கூடிய முறையில் காட்சிகளை அமைக்கக் கூடத் தவறிவிடுகின்றனர். இது நாடகத் தயா ரிப்புக்குப் பெருஞ் சிரமத்தைக் கொடுக்கிறது. நாடகம் குறைந்த காட்சிகளை உடையதாய், ஒவ் வொரு காட்சியும் நியாயமான நேரத்தை எடுக் கத்தக்கதாய், அமைவதுடன் தங்குதடையின்றி ஓடக்கூடிய முறையிலும் காட்சிகளை ஒழுங்குபடுத்தி எழுதவேண்டு மென்பதைப் பள்ளி நாடக எழுத் தாளன் மறந்துவிடக் கூடாது. தயாரிப்புக்கு உறுதுணை புரியும் வகையில் பிரதி இருக்குமானல் அப் பிரதிக்குக் கூடிய வரவேற்பு இருக்கும் என்ப துண்மை.

## நாடக வசனம்

பள்ளி நாடகவசனம் பற்றி எண்ணும்போது அவை கூடிய அளவில் சாதாரண முறையில் அமைந்திருப்பது விரும்பத்தக்கதாகும். நடிப்பவர் கள் மாணவர்களாய் இருப்பதால் அவர்கள் மன னம் செய்யத்தக்க முறையில் தான் வசனங்களை அமைத்துக்கொள்ள வேண்டும். இயற்கை அற்ற தாய், நீண்டதொடர் வாக்கியங்களாய், மூச்சு விட முடியாத வகையில் வசனங்களை அமைத்து விட்டால் மாணவர்கள் மனனம் செய்யப் பெரும் கஷ்டமுற நேரிடும். எனவே மதிநுட்பமாக வசனங்களை அமைத்துக் கொள்ளவேண்டும். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிகன் பேசிமுடியுமிடத்தில் மற்ற நடிகன் இலகுவாகத் தொடங்கக்கூடிய விதமாக வசனங்களை நுட்பமாக அமைத்தால் எக்காரணம் பற்றியும் வசனங்களை மறக்க இடமிருக்காது.

பாடசாலைகளில் பெரும்பாலும் சரித்திர, சமய, இலக்கிய நாடகங்களே இடம் பெறுகின்றன. அவைகள் எழுதப்படும்போது கண்டிப்பாக நிட்சயமாக உயர்ந்த நடையில் அமைய வேண்டும். அதனுல் நாடகங்கள் புனிதமான முறையில் அமைவதுடன், மாணவர்களின் சொல்லாட்சித் திறனையும் கூட்டமுடிகின்றது. சமூக நாடகமாயின் கொச்சைத்தமிழ் ஓரளவுக்குப் பொருத்தமாக இடம்பெறுவது வரவேற்கத்தக்கதேயாயினும் பள்ளி நாடகங்களைப் பொறுத்த மட்டில் கட்டுப்பாடாகவிருந்தால் நன்மையையே பயக்கும். சபைக்கு உதவாத சொற்பிரயோகங்கள், புண்படுத்தத்தக்க வசனங்கள் பள்ளி நாடகங்களில் விலக்கப்படல் வேண்டும்.

மாணவர்களுக்கென உருவாக்கப்படும் இலக்கிய சிருஷ்டிகளில் அவர்களுக்கு புரியும் வார்த்தைகள், கருத்துகள் மட்டுமே இருக்கவேண்டும் என்ற கருத்துடையவர்களும் உளர். இது முற்றிலும் ஏற்கத்தக்க வாதம் அல்ல. மாணவர்கள் இலகுவில் விளங்கத்தக்க சொற்றொடர்கள் பள்ளி நாடகங்களில் அதிகமிருந்தாலும்கூட புதியவற்றையும் இருபது வீதமளவிலாவது புகுத்தி அவர்களது இலக்கிய அறிவை நுகர்வை உரமூட்டுவதும் பள்ளி நாடக எழுத்தாளன் கடனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளி நாடகப் பாடல்கள்

பள்ளி நாடகப் பாடல்கள் எந்த வகையில் அமைய வேண்டுமென்பதும் ஆராயவேண்டிய முக்கிய தொன்றாகும். பண்டுதொட்டே தமிழ் இசை ஒருமரபு முறையாய் வளர்க்கப்பட்டு வருகிறது. அந்த மரபைப் பின்பற்றி பள்ளி நாடகங்களில் கர்நாடகசங்கீத முறைபற்றிய பாடல்களைப் புகுத்தலாம். அதைவிடுத்து மேற்கத்திய சங்கீதமுறையையோ அல்லது தரக்குறைவான இந்திமெட்டு பாடல்களையோ புகுத்தக்கூடாது. சமீபத்தில் ஒரு பள்ளி நாடகத்தில் யமகிங்கரர்கள் 'பயலா' பாட்டு மெட்டில் நடமாடும் காட்சியொன்றைப் பார்த்து வெட்கமுற்றேன். பாடல்கள் இல்லாமலேயே பள்ளிநாடகங்கள் எழுதி நடிப்பித்து வெற்றிகண்ட ஆசிரியர்கள் உளர். நாடக ஓட்டத்தை தடைசெய்யும் வகையில், ரசிகர்களுக்கு மனச்சலிப்பை ஏற்படுத்தும் வகையில் வலிந்துகட்டி பாடல்களைத் திணிக்க வேண்டிய அவசியமில்லை. பாடல்கள் கட்டாயம் இடம் பெறத்தான் வேண்டும் என்னும் பட்சத்தில் அவை தமிழிசை மரபையொட்டியதாக இருக்க வேண்டுமென்பதை பள்ளி நாடக எழுத்தாளன் மனதில் இருத்த வேண்டும்.

## முழுநீள நாடகம்

பாடசாலைகளில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு விதமான நாடகங்கள் தேவைப்படுகின்றன. சிலவேளைகளில் ஓரங்க நாடகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படலாம். எனவே பள்ளிநாடக எழுத்தாளன் முழுநீள நாடகம், ஓரங்க நாடகம் எழுதுவதில் கடைப்பிடிக்கத்தக்க உத்திகள் பற்றியும் அறிந்திருத்தலவசியம். முழுநீள நாடகத்தில் தொடர் சங்கிலிபோல் பல்வேறு சம்பவங்கள் நிகழ்ச்சிகள் பரவலாக இடம் பெறல் வேண்டும். இவற்றில் வெவ்வேறு குண இயல்புகள் உடைய பாத்திரங்கள் தோன்றி பல்வேறு உணர்ச்சிகளைத் தெறிக்கச் செய்யவேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாத்திரங்கள் தொடர்பு கொள்ளும் பொழுதோ அல்லது 'விதி' போன்ற வெளிச்சக்திகளின் தாக்குதல்களுக்குள் எந்தப் பாத்திரமாவது சிக்கல் உறும்போதோ, அன்றி ஒரு பாத்திரத்தின் பல்வேறு குண இயல்புகளில் ஒன்று மற்றொன்றுடன் முட்டி மோதும் போதோ சிக்கலான சம்பவங்கள் பிறக்கின்றன என்ற கருத்தைச் சிந்தையில் இருத்தி முழுநீள நாடகத்தை எழுத வேண்டும். முழு நீள நாடகம் ஒரு பெரிய நிகழ்ச்சியை மட்டும் சித்தரிப்பதாய் அமையாது அதைக் கவின்பெறச் செய்யும் பல கிளை நிகழ்ச்சிகளையும் உடையதாயிருத்தல் வேண்டும். நாடகத்தில் ஒருவகைப் போராட்டமிருத்தல் வேண்டும். வீறு குறைந்த சிக்கல்கள் அடங்கிய பெரிய சிக்கல் முழு நீள நாடகத்தில் நிட்சயமாக இடம்பெற வேண்டும். அடுத்து நிகழக் கூடியதென்ன? என்ற அவா உணர்வை (Suspense) இரண்டு மூன்று காட்சிகளுக்கிடையில் புகுத்தி எழுத்தாளன் நாடகத்துக்கு விறுவிறுப்பூட்டுவானேயானல் அந்நாடகம் மேடையிடப்படும் போது பெரு வெற்றியை ஈட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல்கள் சிக்கல்களாகவும், அவையே உச்சக்கட்டத்தை (Climax) அமைக்கும் படிகளாகவும் அமைகின்றன. உச்சக்கட்டம் முழு நீள நாடகத்தில் மதிநுட்பமாக அமைக்கப்பட வேண்டும். உச்சக்கட்டத்தைத் தொடர்ந்து வரும் நிகழ்ச்சிகளை எந்த வகையிலும் தளர்வுருமல் சிருஷ்டிப்பதில் எழுத்தாளன் கவனமாயிருத்தல் வேண்டும்.

## ஓரங்க நாடகம்

ஓரங்க நாடகம் எழுதும்போது எழுத்தாளனுக்குப் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஓரங்க நாடகம் என்றால் என்ன? அது எழுதும்போது கைக்கொள்ள வேண்டிய உத்திகளென்ன? என்பவற்றை நன்கு விளங்கிய பின்னர்தான் பள்ளி நாடக எழுத்தாளன் எழுதத் தொடங்க வேண்டும். முழுநீள நாடகமாக நடிக்கத்தக்க நாடகத்தைச் சுருங்கிய குறுகிய நேரத்தில் நடிக்கத்தக்கதாய் அமைத்துவிட்டால் ஓரங்க நாடகம்தானே எனப் பலர் எண்ணுகிறார்கள். இது தப்பான எண்ணமாகும். குறுகிய கால எல்லை ஓரங்க நாடகத்தில் முக்கிய அம்சமென்பதை ஒத்துக்கொள்ளும் வேளை அதைப் பல்வேறு களங்களிலும் நகர்த்தலாமா என்பது சிந்திக்கப்படவேண்டிய அம்சமாகும். பிற்காலத்தில் எழுதப்பட்ட பல சிறந்த ஆங்கில அமரிக்க ஓரங்க நாடகங்கள் களத்தைப் பொறுத்தமட்டில் ஒரு களத்திலேயே அமைந்திருப்பதை அவதானிக்கக்கூடியதாய் இருக்கிறது. சிதம்பர சுப்பிரமணியனின் 'தோல்வி' என்ற நாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தை நல்ல ஓரங்க நாடகத்துக்கு உதாரணமென லாம். முழு நாடக நிகழ்ச்சியும் ஒரு கூடாரத்தில் நடப்பதாய் அமைந்திருக்கிறது. கால கட்டமும் குறுகியதாய் இருக்கிறது.

காட்சிகளைப் பொறுத்தமட்டில் இரண்டு வகையான உத்திகளைக் கையாளலாம். ஒரே களத்தில் நிகழ்வதாய் ஆனால் பல காட்சிகளை உடையதாய் அமைப்பது ஒருவகை. மற்றையது ஒரே களத்தில் ஒரு காட்சியில் அமையும்படி எழுதுவது. 'சூழ்ச்சியும் வென்றது' என்ற தலைப்பில் ஓர் ஓரங்க நாடகம் பார்த்தேன். இந் நாடகத்தின் களம் கைகேயியின் படுக்கை அறையாக அமைந்தது. காட்சிகள் இரண்டு இடம்பெற்றன. கூனி கைகேயியைச் சந்திப்பது, இராமனைப்பற்றி முடைவது, வாக்குச் சாதுரியத்தினால் அவள் மனதை மாற்றுவது என்பவை அடங்கிய முதற் காட்சியும் — தசரதன் கைகேயியின் படுக்கை அறைக்கு வருதல், அவளின் நிலை கண்டு பதறல், தேற்றுதல், அதைத் தொடர்ந்து கைகேயி கேட்கும் வரங்கள், அதனாலேற்படும் தசரதன் தவிப்பு, இறப்பு என்பவை இடம்பெறும் இரண்டாம் காட்சியும் — இந் நாடகத்தில் இடம்பெற்றன. இந் நாடக அமைப்பு முதலில் குறிப்பிட்ட வகையைச் சேர்ந்தது. ஏற்கனவே குறிப்பிட்ட சிதம்பர சுப்பிரமணியனின் 'தோல்வி' என்ற நாடகம் பிந்திய வகையைச் (ஒரே காட்சி) சேர்ந்தது. ஒரே களம்; ஒரே காட்சி; மிகக் குறைந்த தொகையான பாத்திரங்கள் என்பன இடம்பெறும் வகையில் அமைக்கப்படும் ஓரங்க நாடகத்தைத் தலையாய உத்தியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்த ஓரங்க நாடகமெனலாம். ஓரங்க நாடகத்தில் சிறந்த ஒரு குணசித்திர பாத்திரமோ அல்லது எதிர்பாராத முடிவோ இருந்தால் அது நாடகத்தை மெருகூட்டி வெற்றியீட்டச் செய்யும். ஒரு சம ஓட்டத்தில் செல்வதாக நாடகத்தை அமைக்காது ஒரு உச்சக் கட்டம் அமையும் வகையிலே அமைத்துக்கொள்வது சிறந்த முறையாகும்.

## சமய, சரித்திர, இலக்கிய நாடகங்களும் கற்பனைப் பாத்திரங்களும்.

பாடசாலைகளில் சமய, சரித்திர, இலக்கிய நாடகங்களையே பெரிதும் ஊக்குவித்தல் வேண்டும். மாணவர்கள், சமயம் - சரித்திரம் - இலக்கியம் சம்பந்தமான கதைகளை - சம்பவங்களை நாடக மூலம் மிக இலகுவாக விளங்கி, மனதில் பதித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால், இப்படியான நாடகங்களைப் பாடசாலை மாணவர்களுக்கு என எழுதும்போது புதிய பாத்திரங்களைச் சிருஷ்டிக்கலாமா? அப்படிச் செய்வதனால் ஏற்படக் கூடிய விளைவு என்ன? என்பனபற்றிச் சிந்தித்தல் பள்ளி நாடக எழுத்தாளன் கடனாகும். இராமாயண காவியம் நன்கு பயின்ற மாணவர் முன் நடிக்கப் பட்ட இலங்கேஸ்வரன் நாடகம் பெரும் குழப்ப நிலையை உண்டுபண்ணியது. அந்த நாடகம் கம்பரின் சிருஷ்டிக்கு நேர் விரோதமான போக்குடன் தான் இருந்தது. மாணவர்களின் இலக்கிய அறிவில் சற்று குழப்ப நிலையை உண்டாக்கியதுடன், ரசனையைப் பொறுத்த மட்டிலும் உயர்ந்திருக்கவில்லை. சில நாடகங்களில் கற்பனைப் பாத்திரங்கள் காவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களின் அடிப்படைக் கருத்தை மாற்றியமைக்கும் வகையிலோ, அன்றி முக்கிய பாத்திரங்களை மிளிரவிடாத வகையிலோ அமைந்தும் விடுவதுண்டு. இதனால் மாணவர்கள் இலக்கிய சரித்திர விடயங்களைப் பிழையாகப் புரிந்து கொள்ள இடமிருக்கிறது. பெரும்பாலும் பள்ளி நாடகங்கள் இலக்கிய, சரித்திர கதைகளை யொட்டிச் சார்ந்து செல்வதாக அமைவதே சாலச் சிறந்ததாகும். வெளி அரங்குகளுக்கு இக் கட்டுப்பாட்டை அழுத்த வேண்டியதில்லை.

## சமய நாடகம்

சமய நாடகம் எழுதும் போது நாடகாசிரியன் பல அம்சங்களில் சிந்தனையைச் செலுத்த வேண்டியவனுகிறன். இந்துமத புராணங்களை, சமய மரபுகளை, சமய தத்துவங்களை, தோத்திரப் பாடல்களை முறையாகப் படியாத நன்கு ஆராயாத ஒருவர் சைவ சமய சம்பந்தமான நாடகம் எழுதுவாரானுல் அவர் மன்னிக்க முடியாத பல பிழைகளை விட்டே எழுதுவார். இந்நிலை சமயக் கதைகள் பற்றி பிழையான கருத்தை மாணவர்கள் பெற வழி வகுக்கிறது. இதேபோல கிறீஸ்தவ, பௌத்த, இஸ்லாமிய கதைகளை நாடகமாக்கும் போது அச்சமயங்கள் பற்றிய ஆழ்ந்த அறிவு நாடகாசிரியனுக்கு வேண்டப்படுகிறது. தருமி பாத்திரத்தை நகைச்சுவைப் பாத்திரமாகச் சிருஷ்டித்தால், இறைவன் கடாட்சம் பெறத் தகுந்த பக்குவமுடையவர் எப்படிப்பட்டவராய் இருக்கலாமென்ற கருத்து அந்த எழுத்தாளனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளிதன்னும் கிடையாதென்பதே அர்த்தமாகும். ஒவ்வொரு சமயத்துக்கும் வெவ்வேறு சம்பிரதாயங்கள் விழாக்கள் உள. அவைகள் பற்றிய விரிவான அறிவுடைய ஒருவரே சமய நாடகங்களை எவ்வித பிழையுமின்றி சிருஷ்டிக்க முடியும். பள்ளி நாடகங்கள் எழுதும்போது - அதுவும் சமயநாடகங்களில் கைவைக்கும்போது மேற்கூறிய விஷயங்களைக் கருத்தில் இருத்துதல் நற்பயனை அளிக்கும்.

## நடிப்பாற்றலுள்ள மாணவர் பற்றிய பிரச்சனை

பள்ளி நாடகங்களை எழுதும்போது ஒரு எழுத்தாளன் அந்த நாடகம் மேடையிடப்படும்போது எழக்கூடிய பிரச்சனைகள் பற்றியும் சிந்திக்க வேண்டியவனுகிறுன். தனிய ஆண்கள் மட்டும் கல்வி பயிலும் பாடசாலைகளில் நடிப்பதற்கென எழுதப் படும் நாடகத்தில் பெண் பாத்திரங்கள் அதிகமாகப் புகுத்தப்படலாயா? அல்லது மகளிர் மட்டும் படிக்கும் பாடசாலைகளில் இடம்பெறும் நாடகங்களில் நூற்றுக்கு எண்பது வீதமான பாத்திரங்கள் ஆண் பாத்திரங்களாய் அமையலாமா? நாடகத்தை அரங்கேற்ற விரும்பும் ஒரு பாடசாலையில் நடிக்கும் ஆற்றல் உள்ளவர்கள் தொகை என்ன? என்பனபோன்ற பல விஷயங்களை மனத்திலிருத்தி நாடகத்தை எழுத வேண்டியவனுகிறுன். நடிப்பதற்குத் தகுதியுள்ள மாணவர்கள் எத்தனை பேர் பாடசாலையில் உளர் என்பதை முன்கூட்டியே அறிந்து பள்ளி நாடகத்தை ஒரு எழுத்தாளன் எழுதுவானுனல் தயாரிப்பு நிலையில் பிரச்சனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் எழமாட்டா. ஆறு நடிகர்களைத்தான் தேர்ந்தெடுக்க முடியுமென்ற நிலையிருக்குமானல் எழுத்தாளன் ஆறு, ஏழு நடிகர்கள் மட்டும் பங்கு பற்றத் தக்க வகையில் நாடகத்தை எழுதிக் கொள்ளவேண்டும். பதினைந்துக்கு மேற்பட்ட பாத்திரங்களைக்கொண்டதாக நாடகத்தை எழுதிவிட்டு நடிப்பதற்குத் திருப்திகரமான மாணவ நடிகர்கள் இல்லையே என்று அங்கலாய்ப்பதில் என்ன பிரயோசனம்? எனவே பள்ளி நாடக நடிகர்களின் தொகையை மனதிலிருத்தி நாடகங்களை எழுது வது பள்ளி நாடக எழுத்தாளன் கடனாகும்.

இதைவிட, ஆண்கள் பயிலும் பாடசாலைகளிலும், மகளிர் பாடசாலைகளிலும் நடிக்க எழுதப் படும் நாடகங்களில் பாத்திரங்களை எவ் வண்ணம் சிருஷ்டித்துக்கொள்ள வேண்டுமென்பதையும் மன திலிருத்திக்கொள்ள வேண்டும். சமீபத்தில் ஒரு மகளிர் பாடசாலையில் மேடையிட்ட நாடகம் ஒன்றைப் பார்வையிட்டேன். நாடக மரபு கெடா வகையில் சிறந்த கருவுடன், உணர்ச்சிமிக்க சம் பவங்களுடன், நல்ல உச்சக் கட்டம், திருப்பம் போன்ற பல சிறப்புக்களுடன் நாடகம் அமைந் திருந்தது. வசனம் மிகப் பொருத்தமாக இருந்தது. ஆனல் அந்த நாடகம் எடுப்பாக அமையாததற் குக் காரணம் அதை எழுதிய எழுத்தாளரே யாகும். அவரது சிருஷ்டியில் பன்னிரண்டுக்கு மேற்பட்ட முக்கிய பாத்திரங்கள் ஆண் பாத்திரங் களாயிருந்தன. நடித்த மாணவிகளிடம் இயற்கை யாகவே நடிப்பாற்றல் இருந்தும், கம்பீரமான தோற்றம் - அருமையான வசன உச்சரிப்பு என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் நாடகம் தோல்வியே கண்டது. ஆண் பாத்திரங்கள் தொகை அளவுக்கதிகமாக உள்ள நாடகத்தைப் பெண்கள் நடித்தாற் பெரும்பாலும் ஏற்படும் விளைவு இதுதான். இதேபோலத்தான் பெண் பாத்திரங்கள் அபரிமிதமாக இருக்கும் நாடகத்தை ஆண்கள் பாடசாலையில் நடிக்கும்போது நாடகம் வெற்றியீட்டுவது குறைவு. எனவே மதிநுட்பமான பள்ளி நாடக எழுத்தாளன் நாடகத்தை எழுதும்போது இது பெண்கள் பாடசாலையில் நடிப்பதற்கா அன்றி ஆண்கள் பாடசாலையில் நடிப்பதற்கா என்று சிந்தித்து, பாத்திரங்களைப் பொறுத்தமட்டில் மகளிர் பாடசாலையாயின் ஆண் பாத்திரங்களைக் குறைத்தும், ஆண்கள் படிக்கும் பாடசாலையாயின் பெண் பாத்திரங்களைக் குறைத்தும் நாடகத்தை ஆக்குதல் சாலச் சிறந்தது. இல்லையெனில், நாடகம் மேடையிடும் போது தோல்வியில் முடியலாம்.

## பாடசாலை நாடகமும், பணம் சம்பந்தமான பிரச்சனையும்.

பாடசாலை நாடகத்தை எழுதும் எழுத்தாளன் அந்த நாடகத்தை மேடையிடும்போது எவ்வளவு செலவு ஏற்படலாம், அதை எந்த அளவுக்குப் பாடசாலை ஈடுசெய்யும் என்ற கருத்துக்களையும் சிந்தையிலிருத்தத் தவறக் கூடாது. இருநூறு ரூபாவுக்குமேற் செலவிடத் தயாராயில்லாத ஒரு பாடசாலையில் நடிக்க, பல பிரமாண்டக் காட்சி அமைப்புக்களுடன், உயர்ந்த உடைகளுடன் ஆயிரம் ரூபா செலவினத்தை ஏற்படுத்

தக் கூடிய நாடகத்தை எழுதலாமா? அதனல் ஒரு வித பிரயோசனமும் இல்லை. இதேபோலத் தாராளமாகச் செலவிட்டு நாடகங்களை மேடையிடக் கூடிய வசதியுள்ள பெரிய பாடசாலைகளில் மிகக் குறைந்த அளவு செலவுடன் நடிக்கக்கூடிய நாடகங்களை ஏன் எழுதி நடிக்கவேண்டும். நல்ல காட்சி அமைப்புகளுடன் திறம்பட நாடகத்தை நடாத்த எழுத்தாளன் ஏன் தடை கல்லாக இருக்கவேண்டும். எனவே, ஒரு பாடசாலையில் நடிப்பதற்காக ஒரு நாடகத்தை எழுதும்போது அந்த நாடகம் மேடையிடப் பாடசாலை தரத்தக்க செலவினம் எவ்வளவு என்பதையும் மனதில் இருத்திக்கொள்வது அவசியமாகிறது.

## பள்ளி நாடகமும், மேடை வசதியும்.

பள்ளி நாடக எழுத்தாளன் ஒரு நாடகத்தை எழுத முன்னர் அந்த நாடகத்தை மேடையிடப் பாடசாலையிலுள்ள மேடை வசதி எந்த அளவில் அமைந்துள்ளது என்பதையும் சிந்தையில் இருத்தல் நற்பயனைத் தரும். பாடசாலையிலுள்ள மேடை சிறிய அளவினதெனின், அதிகமான பாத்திரங்கள் ஒரே காட்சியில் சந்திக்கக்கூடிய விதமாக நாடகக் காட்சிகளை எழுதுவது புத்திசாலித் தனமாகாது. பத்துப் பன்னிரண்டு பேர்கள் ஒரு காட்சியில் தோன்றும் கட்டம் வரும்போது சிறிய மேடையில் அக் காட்சி ஒருபோதும் எடுப்பாக அமையாது. ஒரு போர்க்களக் காட்சியை மிகச் சிறிய மேடையில் எவ்வண்ணம் காட்டுவது? மூன்று, நான்கு அல்லது ஐந்து பாத்திரங்கள்வரை இடம்பெறக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய காட்சிகள்தான் சிறியளவினதாக உள்ள மேடைக்குப் பொருத்தமாகும். எனவே, மேடை சம்பந்தமான சிந்தனையையும் மனதில் கொண்டு பள்ளி நாடகத்தை எழுதுவது எழுத்தாளன் கடமையாகும்.

பள்ளி நாடக எழுத்தாளன் ஆழ்ந்து நோக்க வேண்டிய அம்சங்களென முன்னர் ஆராயப்பட்டவற்றைத் திரட்டிக் குறிப்பிடுவது நினைவுகூர உதவுமல்லவா? எனவே அவற்றைச் சுருக்கமாக கீழே தருகிறேன்.

* மாணவர்களின் உள வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து நாடகங்களை எழுதுதல் வேண்டும்.

* நல்ல கரு அமைந்த புனிதமான சம்பவங்களைப் பெரும்பாலும் கொண்ட நாடகங்களை எழுதுதல் நற்பயன் தருவதாகும்.

* இலகுவான, மனனம் செய்யத்தக்க, அதே வேளை இலக்கிய மணம் கமழும் வசனங்களை எழுதுதல் சாலச் சிறந்தது.

* பாடல்கள் புகுத்தப்படும் பட்சத்தில் அவை தமிழ் இசை மரபையொட்டி இருத்தல் வேண்டும்.

* முழுநீள நாடகம் சிறு நாடகம் ஓரங்க நாடகம் பற்றிய அறிவை அவை எழுதப்படும்போது கையாள வேண்டிய உத்திகளை நன்கு அறிந்து எழுதுதல் மிக அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சமய சரித்திர இலக்கிய நாடகங்களை மாண வர்களுக்கு என எழுதும்போது, புதிய பாத் திரச் சிருஷ்டிப்பு, திரிவான சம்பவங்கள் என் பவற்றால் குழப்பியடித்தல் தக்கதல்ல.

* சமூக நாடக எழுத்தில் கூடிய கவனம் வேண் டப்படுகிறது. கொச்சைத் தமிழ் உபயோகத் தில் கவனமும் கட்டுப்பாடும் இருத்தல் அவ சியம்.

* பாடசாலையில் நடிக்கத்தக்க ஆற்றல் உள்ள வர்கள் தொகை - நாடகத்தை மேடையிட இருப்பது ஆண்கள் மட்டும் பயிலும் பாட சாலையா? அன்றி மகளிர் பாடசாலையா? - நாடகம் நடிக்க வரக்கூடிய உத்தேசச் செலவு என்ன? - பாடசாலையி லிருக்கும் மேடை வசதி எத்தகையது? - இன்னோரன்ன பல விஷயங் களைக் கருத்திலிருத்தி பள்ளி நாடகங்களை எழுதுதல் தயாரிப்பு நிலையில் பல பிரச்சனை களைத் தவிர்க்க உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை நாடகத் தயாரிப்பு சம்பந்தமான சில குறிப்புக்கள்

தகுதியான நல்ல நாடகப் பிரதியைத் தேர்ந்தெடுப்பதுடன் நாடகத் தயாரிப்பு ஆரம்பமாகிறது. மாணவர்களின் தகமைக்குத்தக்க இலக்கியத் தரமும், மேடைக்கு எடுக்கக்கூடிய அம்சங்கள் நிரம்பியதுமான பிரதியை தேர்ந்து கொள்வதில் முதற்கண் கூடியகவனம் செலுத்தவேண்டும்.

நடிகர் தெரிவு அடுத்த முக்கிய அம்சமாக அமைகிறது. உரத்து வாசித்தல் - பல்வேறு உணர்வுகளையும் வெளிக்கொணரும் வகையில் வாசித்தல் என்பனவற்றை எடை போட ஒரு பரீட்சையை நடிக்க விரும்புவர்கள் மத்தியில் வைத்து தலையாயவர்களை நடிக்க வைத்தல் மேற்புடைத்து. இத்துடன் பாத்திரங்களுக்கு ஏற்ற முக வெட்டு, தோற்றம் என்பன உண்டா என்பவற்றையும் கவனித்துக் கொள்ளுதல் அவசியம். சிலரைத் திருப்திப் படுத்துவதற்காக முகமனுக்கு நடிகர் தேர்வை வைத்நால் அது தோல்விப் பாதையில் கொண்டு சென்றுவிடும்.

அடுத்து, நாடகத்தின் கரு-கதை - காட்சிகள்-பாத்திரங்களின் தன்மை என்பன பற்றி விளக்கம் கொடுக்க வேண்டும். மாதிரிக்குச் சில காட்சிகளை வாசித்துக் காட்டுதல் சிறந்தது. வெவ்வேறு நிலைகளில் பாத்திரங்கள் எப்படி எப்படிப் பேசும் என்பதை அழுத்திக்கூறி வாசித்துக் காட்டுதல் அவசியம். அப்படியானுல்தான் மனனம் பண்ணும் நோக்குடன் திரும்பத் திரும்பப் படிக்கும்போது பேசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட வேண்டிய முறையையும் மனதில் பதித்துக் கொள்ளுகிருன். இல்லையெனில் சினிமா நடிகர்கள் சிலரின் பாணியைத் தன்னிஷ்டம் போல் நடிக்க இருப்பவன் பின்பற்றவும் கூடும்.

ஒத்திகைகளின்போது நிலைகள் - அசைவுகள் பற்றி நல்ல விளக்கங் கொடுக்கத் தவறக்கூடாது. காரணமின்றி அசைவுகள் இருத்தலாகாது. இரசிகர்கள் பார்க்கத்தக்க வகையில் மேடையில் நிற்றல் - அசைதல் என்பவற்றில் பயிற்சி அளிக்கும் அதே வேளை இயற்கை அற்ற முறையில் அவை அமைய விடக்கூடாது. உரையாடல் நிகழும்போது பாத்திரங்களைப் பார்த்து பெரும்பாலும் சம்பாஷிப்பதேயன்றி, சபைக்குப் பிரசங்கம் செய்யும் பாணியில் பேசவிடக் கூடாது. சபைக்கு பின் காட்டி நடிப்பது பொதுவாக தவிர்க்கப்பட வேண்டிய விதி என உணர்த்திஞலும், தேவை நோக்கி இடை இடையே சபையைப் பாராது பின்காட்டி நடிப்பதும் பிழையல்ல என்பதை வற்புறுத்த வேண்டும். வேண்டிய அளவு உரத்து அழுத்தம் கொடுக்க வேண்டிய இடத்தில் அழுத்தம் கொடுத்துப் பேசப் பயிற்சி அளிக்க வேண்டும். மட்டுக்குமீறிக் கத்தும்படி செய்தால் அது இரசிகர்களுக்கு இன்பத்தை அளிக்காது. நடிப்பைப் பொறுத்தமட்டிலும் மிகையான நடிப்பு (Over - acting) தவிர்க்கப்பட வேண்டும். இயற்கைபோல அமையும் வகையில் நடிக்கப் பழகுவதில்தான் வெற்றி தங்கியுள்ளது.

தரமான நாடகங்கள் உருவாக வேண்டுமெனின் ஒத்திகைகள் முறைப்படி நடைபெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். முதலில் இயக்குநன் ஒத்திகைகள் பற்றிய நேரஅட்டவணையை அமைத்துக் கொள்ள வேண்டும். தயாரிக்கப்பட்ட அட்டவணைப்படி பயிற்சிகளை நடாத்துவதில் கண்டிப்பு மிகமிக அவசியம். முழுநீள நாடகமெனின் இருபது தடவைகள் ஒத்திகைகள் நடத்தத் தவறக்கூடாது. இடைவெளி அதிகம் விடாது ஒத்திகைகளை அடுத்து அடுத்து நடாத்துதல் மாணவ நடிகர் களுக்குப் பலவழிகளிலும் உதவியாய் அமையும். பயிலும் விடயங்களை மனதில் இருத்த, தம்மைத் திருந்திய நிலைக்கு இட்டுச் செல்ல இது வகை செய்யும்.

குறிப்பிட்ட நேரத்துக்கு ஒத்திகைகளை ஆரம் பித்தல் - முடித்தல் என்பன நாடக இயக்குநனின் தலையாய கடமையாகும். அதுவும் பாடசாலை நாடகத் தயாரிப்பில் ஈடுபடுபவர் மாணவர் களுக்கு முன்மாதிரியாய் இருத்தல் அவசியமாகி றது. குறிப்பிட்ட நேரத்துக்கு வந்து ஒத்திகை முடிந்த பின்பும் நின்று இறுதியாகச் செல்லுதல் இயக்குநன் கடனாகும். அத்துடன் நடிகர்களையும் நேரத்துக்கு வரும்படி வற்புறுத்தவேண்டும். மாணவ நடிகர்களுக்குக் களைப்போ அன்றி வெறுப்போ ஏற்படாவகையில் ஒத்திகை நேரத்தை மூன்று மணித்தியாலங்களுக்கு மேற்பட விடலா காது.

ஒத்திகைகள் நடக்கும் வேளை பங்குகொள் ளும் மாணவ நடிகர்கள் தவிர்ந்த ஏனையோர் கதைப்பதில் வீண்காரியங்களில் ஈடுபடுவதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தைச் செலவிடுகின்றனர். இதைக் கட்டுப் படுத்தி, அமைதியை நிலைநாட்டி, எல்லோரது சிந்தனையையும் ஒருமுகப்படுத்தி நாடகத்தயாரிப் பில் ஊன்றி நிலைக்கச் செய்தல் பள்ளிநாடக இயக்குநன் பெரும் கடனாகிறது. ஒழுங்கான ஒத்திகைகள்மூலம் நடிகர்கள் மனனம் செய்யும் வேலையை இலகுவாக முடித்துவிடலாம். குறுகிய அறைகளில் அல்லது இடங்களில் ஒத்திகை நடாததினால் குரல் சம்பந்தமான பயிற்சியை யொட்டிய குறை ஏற்படலாம். இறுதியாக நடிக்க உபயோகிக்க உத்தேசித்துள்ள மேடையின் அளவு அகன்ற இடத்தில் பயிற்சி நடத்தினால் எவ்வித குறைபாடுகளும் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்ள முடியும். உடைகள் அணிவித்து நடாத் தப்படும் இறுதி ஒத்திகையின்போது பேச்சு - நடிப்பு - மற்றும் முக்கிய அம்சங்கள் பற்றிய புதிய மாற்றங்களைப் புகுத்தக் கூடாது. ஒளி - காட்சி - சோடனை - உடை - ஒப்பனை என்ற விடயங்கள் பற்றிய முறையான ஒழுங்கை இறுதியாய் நடை பெறும் இரு ஒத்திகைகளில் வரையறை செய்தல் அவசியம். காட்சி சோடனையைப் பொறுத்த மட் டில் பெரும்பான்மையான பள்ளி ஆசிரியர்கள் பிழையான முறையைக் கடைப்பிடிப்பதை அவதா னிக்க முடிகிறது. பூஞ்சோலைக்காட்சி என்றதும் பூக்கொப்புகளை மேடையில் குவித்து தென்னோலை களைப் பிடித்துக் காட்சி அமைக்கிறார்கள். இயற் கைப் பொருட்களால் காட்சிச் சோடனை செய் வது கலையின் பாற்பட்டதன்று. செயற்கைப் பொருட்கள் மூலமே காட்சிச் சோடனைகளை அமைத்துக் கொள்ள வேண்டும். நாடகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைக்கும் பாத்திரங்களின் இயல்புக்கும் ஏற்ப உடை ஒப்பனை அமையவேண்டும். பதினெட்டாம் நூற்றாண்டில் நடப்பதாய் அமையும் நாடகத்துக்கு இன்றைய நவீன உடைகள் பொருந்தா. ஒப்பனை நடைபெறும் இடத்தில் ஒழுங்கை நிலைநாட்டுதல் அவசியம். சிறிய பாத்திரம் என்பதற்காக ஒப்பனை உடை விடயத்தில் கவனம் செலுத்தாது இருத்தலாகாது. நாடகம் மேடையிடப்படும் தினத்தில் அனாவசியமாக யாரையும் ஒப்பனை செய்யப்படும் இடத்திற்கு அநுவதிக்கக்கூடாது. நடிகர்களிடம் தன்னம்பிக்கை உரமேறும் வகையில் பள்ளிநாடக இயக்குநன் இறுதிக் கட்டத்தில் மதிநுட்பமாய் நடந்து கொள்ளவேண்டும்.

'நாடகம் ஒரு கூட்டு முயற்சி. இதில் சுயநலம் தவிர்க்கப்பட வேண்டியது' என்ற உணர்வை மாணவ நடிகர்களிடம் பதியச்செய்து குழு உணர்வுடன் உயர்ந்த இலக்கை எய்த அவர்களை ஆற்றுப் படுத்துபவனே தலையாய பாடசாலை நாடகத் தயாரிப்பாளனாகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மாதிரி நாடகம் (15 நிமிடங்கள்)

## ஏ. ரி. பொன்னுத்துரையின்

# "வீர முரசு"

தமிழ்த் தின விழாவை முன்னிட்டு, கண்டி, புஷ்பதானக் கல்லூரி மண்டபத்தில் 22-7-71இல் இரஜவலை, தமிழ் மகா வித்தியாலயத்தால் மேடையேற்றப்பட்டு, பரிசு பெற்ற நாடகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாத்திரங்கள்

1. இரும்பொறை — மன்னன்
2. மோசிகிரனார் — புலவர் பெருந்தகை
3. வீரன் 1 — சேவகன்
4. வீரன் 2 — சேவகன்
5. போர் வீரர் 1
6. ,, ,, 2
7. ,, ,, 3
8. ,, ,, 4
9. ஓதுவார்
10. அமைச்சர்

## வேண்டிய பொருட்கள்

1. வீர முரசு
2. வீர முரசு வைக்கப்படவேண்டிய அலங்காரக் கட்டில்
3. அரசனின் உடை வாள்
4. சாமரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 1

*[வீரமுரசு நடுவே வைக்கப்பட்டுள்ளது: அரசன், அமைச்சன், வீரர்கள், அணியாக நிற்கின்றனர்; பாடுகின்றனர்.]*

பாட்டு: வீரமுரசு! வீரமுர சடா!
திரமோடு போர் புரிய
நாத மெழுப்பும் முரசு! — வீரமுரசு! வீரமுரசடா!
பாரிலெங்கள் புகழ்பரந்து வீசவே!
பண்பாட்டு கோலங்கள் மிளிரவே!
நீதிநெறி நம்நாட்டில் நிலவவே!
நீள்புகழ் நித்தம் கொழித்து வாழவே! — வீர

*[பாடல் முடிகிறது]*

அமைச்சர்:- சோழ நாடு சோறுடைத்து; பாண்டிய நாடு முத்துடைத்து; சேர நாடு வேழம் உடைத்து என்ற கூற்று, உங்கள் அனைவருக்கும் நன்கு தெரிந்ததே! எமது நாடு சேர நாடு. இங்கே நிறைந்து இருப்பது வேழம். வேழம் வீரத்தின் திருஉரு. ஆமாம். தின வெடுக்கும் தோள்கள் — தீர்க்கமான படைக்கலப் பயிற்சி — புறங்காட்டாப் பண்பு இத்தனையும் எமது வீரத்தைப் பறைசாற்றுகின்றன. மாமன்னர் இரும்பொறையின் தீரமும் — உயிரையும் மதியாது போர்க் களத்தில் சமராடும் திறமும் — எமக்கு மட்டில்லா வெற்றியை ஈந்தன. அத்தனைக்கும் ஆதாரசுருதியாய் அமைந்தது இந்த வீரமுரசு. எனவேதான் இவ் வீர முரசுக்கு விழாவெடுக்கிறோம்.

எங்கோன் இரும்பொறை செங்கோல் வாழிய!

எல்லோரும்:- மங்காப் புகழொடு வாழிய! வாழிய!

அமை:- வெற்றியை ஈட்டிய இரும்பொறை வாழிய!

எல்:- வற்றாது அவன் புகழ் என்றும் வாழிய!

அமை:- வாழிய! வாழிய! எங்கோன் வாழிய!

எல்:- ஊழி பல்லூழி வாழிய வாழிய!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பொறை:- இந்த நாட்டைத் திறம்பட ஆட்சிபுரியத் தோளோடு தோளாய் உடனிருந்து உதவும் அமைச்சரே! என் உயிரனைய சேனைவீரர்களே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கங்கள்! இன்றையதினம் நாமெல்லாம் வீரமுரசுக்கு அஞ்சலி செய்கிறோம். ஊரூராக ஊர்வலம் நடாத்தத் தயாராகிக் கொண்டிருக்கிறோம். பரம்பரை பரம்பரையாக மூன்று முரசுகள் நம்மிடை முக்கியத்துவம் பெற்று இலங்குகின்றன, அவைதான் கொடைமுரசு, நியாயமுரசு, வீரமுரசு என்பவை. அவற்றுள் தலையாயது வீரமுரசு. எமது உயிரினும் மேலாக இதை மதிக்கிறோம். வேந்தர்கள் முரண்படும்போது, எவன் மற்றவனது வீரமுரசைத் தாங்கி நிற்கும் வீரர்களைத், தோற்கடித்து, அம் முரசை அகப்படுத்துகிறானோ அவனுக்கே வெற்றி உரியதாகிறது. எனவே, எமது தாய் நாட்டின் தலையாய முதுசொத்து இந்த வீரமுரசு. இதனை மதித்து, ஏகோபித்து எல்லோரும் தலை வணங்குவோம்! (அனைவரும் தலைகுனிந்து வணங்குகின்றனர்) கோஷமிட்டுத் தோள்மேல் தாங்கிச் செல்வோம். (இரு வீரர்கள் தோள்மேல் தாங்குகின்றனர்) வாழ்க வாழ்க என வாழ்த்திச் செல்வோம். வீரமுரசு!

எல்:- வெற்றி முரசு!!

அமை:- நாடு செழிக்க!

எல்:- காக்கும் முரசு!!

அமை:- ஆண்மை பீறிட

எல்:- ஒலிக்கும் முரசு!

அமை:- மாற்றார் மடிய

எல்:- முழங்கும் முரசு!!

[எல்லோரும் பாடியபடி நடக்கின்றனர்]

வீரமுரசு வீரமுர சடா!

............ ............ .........

திரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி 2

இடம்: பெருஞ்சேரல் இரும்பொறையின் அரண்மனை.

[போர் முரசு வைக்கப்படவேண்டிய கட்டில் அலங்காரமாகக் காட்சியளிக்கிறது. மலர்கள் தூவப்பட்டுக் கிடக்கின்றது.]

மோசிகீரனார் தள்ளாடியபடி வருகிறார்.

மோசிகீரனார்:- (தனக்குள்) அப்பப்பா! ஒரே வெய்யில்! தாங்கொணா வெய்யில்! பனியால் நனைந்தேன் அதிகாலையில்! வெயிலால் உலர்ந்தேன் இவ்வேளையில்! கால்கள் கொப்பளிக்கத் தாவித் தாவி ஓடினேன் அந்தக் காட்டுப் பகுதியில்! குன்றென்றும் குழியென்றும் பார்க்கவில்லை — முள்ளென்றும் கல்லென்றும் சிந்திக்கவில்லை — மேடென்றும் பள்ளமென்றும் பின்வாங்கவில்லை.

எப்படியாவது தகடூர் எறிந்த தலைமகனை — மாற்றாரைப் போர்க்களத்தில் பந்தாடிய மாவீரனை — பைந்தமிழ்ப் புலவர்களுக்கு வாரி வாரி வழங்கிய வள்ளலை — வீரத் திருஉருவாம் பெருஞ்சேரல் இரும்பொறையைக் காணவேண்டும் என்ற இலட்சியம் பிடித்து உந்த, ஒருவாறு இவ்விடம் வந்தேன். அரசர் அரண்மனையில் காலடி எடுத்துவைக்கும் இவ்வேளை எனக்கு ஏற்படும் உவகை. ஆஹா!

[அந்தப் பக்கம் ஒரு வீரன் வருகிறான்]

வீரா! நம் அரசர் எங்குள்ளார்?

வீரன்:- என்னது? நீர் யார்?

மோசி:- நான் ஓர் பைந்தமிழ் புலவன். என் பெயர் மோசிகீரனார். நும் மன்னரின் மகத்தான புகழ் கேட்டு அவரை என் கண்களால் காணவேண்டும் என்ற பேரவாவுடன் வந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரன்:- இன்று வீர முரசுக்கு கோலாகலமான விழா நடை பெறுகிறது. பிரமாண்டமான ஊர்வலத்தில் மன்னர் பிரான் கலந்து கொண்டிருக்கிறார். இந்த நேரத்தில் தலைக்கு மிஞ்சிய வேலைகள் இருக்கின்றன. போம் போம் காலத்தை வீணாக்குகிறீர்,

மோசி:- அப்படியானால்...

விரன்:- அரண்மனையில் தங்கமுடியாது; அரசர் பெருமானைப் பார்க்க முடியாது!

மோசி:- இல்லைத் தம்பி, நாடிவந்த காரியத்தில் நன்மை கிட்ட.........

விரன்:- நாடி வந்ததை விட்டிட்டு நடையைக் கட்டையா. (வீரன் மிடுக்காய் செல்கிறான்)

மோசி:- என்ன? அரசனைக் காணும் எண்ணம் கல்மேல் இட்ட கலம்தானா! எவ்வளவு காத தூரத்தைக் கால் நோக நடந்து வந்தேன். ஆ! கண்கள் சுழல்கின்றன! கால்கள் தளர்கின்றன. என்னால் நிற்கவே முடிய வில்லை. கண்களை ஏதோ உறுத்துகிறது. உடலெல் லாம் வியர்க்கிறது. உயிரே ஆட்டம் கண்டுவிடுமோ என்ற பீதிதான் பிறக்கிறது. ஐயோ!...ஆ!...ஆ...ஆ...

[முரசுக் கட்டிலில் படுத்து முனகி நித்திரை செய்கிறார். முரசு ஊர்வல கோஷங்கள் ஒலிக்கின்றன.]

[அரசன் சற்றுமுன் இரு வீரர்கள், ஓதுவார் தொடர அரண்மனைக்கு வருகிறான்.]

இரும்:- வீரா!

வீரன்:- (தலை குனிந்து) மன்னவா!

இரும்:- ஊர்வலம் முடிவடையும் கட்டத்தை அடைந்து விட்டது. அதோ! அரண்மனையையே அண்ணமித்து விட்டது. நான் இட்ட கட்டளைகள்....

வீரன்:- செயற்படுத்தி விட்டேன் மன்னவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்:- அப்படியா! மிக்க மகிழ்ச்சி! பேரானந்தம். கொற்றவை விழா அதையடுத்து ஊர்வலம் வெற்றியாய் நடந்தமை எனக்குப் பேரின்பத்தை அளிக்கிறது; உவகை ஊட்டுகிறது. என்னையும் அறியாமலே ஏதோ ஒரு இன்ப உணர்வு ஆகாயத்தில் என்னை வட்டமிடச் செய்கிறது. அடுத்தது என்ன விருந்து! பிரமாண்டமான அளவில் என் குடிமக்களுக்கு விருந்து! வீரமுரசு விழாவை அடுத்து விருந்து!!

[கட்டில் பக்கம் கண்ணைப் பாய்ச்சுகிறார். பொங்கும் கோபத்துடன்]

யாரது? முரசுக் கட்டிலில் ஒரு மானிட உருவம் மதியற்ற மூடன்! வீரத்தின் திரு உருவாய் — எனது முடியினும் மகத்தான அருங்கலமாய் — முரசங்களுள் தலையாய இந்த வீர முரசை அவமதித்து விட்டான். அது வைக்கப்படவேண்டிய கட்டில்தானு கிடைத்தது இந்தப் புல்லனுக்கு? எத்தனையோ அரசரை அடிபணியவும், ஆணவக்காரரை மண்டியிடவும் செய்த எனது அரண்மனையில் இப்படியொரு இழிவான செய்கை. நீராட்டி, உலா எடுத்து, ஊர் மக்கள் வாழ்த்திய வீரமுரசு கொலு இருக்கவேண்டிய கட்டிலில், கேவலம் ஓர் அற்பன்! அயோக்கியன்!

எனது உடைமைக்கு — உயிரினும் மேலான பொருளுக்குக் குந்தகம் இழைத்த கொடியவன்! அடே! இத்தகைய செய்கை செய்ய எப்படியடா துணிந்தாய்? இதோ இந்தக் கூரிய வாள் உன்னை இருகூறுக் கட்டும். தலைவேறு முண்டம் வேருகத் துண்டிக்கட்டும். தவித்துத் தவித்து, துடித்துத் துடித்து உன் உயிர் பிரியட்டும்.

[வாளை ஓங்குகிறார்]

வீரன் 1 :- (ஒருபக்கத்தில் நின்றபடி) ஐயோ! தொடைகள் 'கிடுகிடு' 'கிடுகிடு' என்று அடிக்குதடா.

வீரன் 2 :- இருதயம் 'படக் படக்' என்று இடிக்குதடா.
[அரசர் ஆழ்ந்து பார்க்கிறார்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீரன் 1 :-** அரசே! தங்களைப் பார்க்கச் சற்றுமுன் இவ்விடம் வந்தவர் இவர். ஏதோ புலவரென்று.....

[அரசரின் முகபாவம் மாறுகிறது. வியப்புப் பீறிட]

**இரும்:-** என்ன? இளைத்த உடல்! சோர்வுற்ற கரங்கள்! வறுமையைப் புலப்படுத்தும் ஆடை! ஆனால், அறிவு ரேகைகள் ஆழப்பதிந்த நெற்றி! விவேகத்தை வெளிக்காட்டும் கண்கள்!! தீஞ் சுவைப் பாடல்களால் தமிழ்த்தாயை அணிசெய்யும் புலவன் எனப் பறை சாற்றும் புனிதமுகம்! தண்ணளியும் சால்பும் நிழலாடும் நிறைந்த முகம்! சாந்தமுகம்!!

ஆ! என்ன காரியம் செய்யத் துணிந்தேன். தலைமேல் இருத்த வேண்டியவரை — பரிசில்கள் அளித்து பாராட்டவேண்டிய அறிவின் பெட்டகத்தை — கல்விக் கடலை - கவிவாணனை. அற்பன் — அறிவிலி — உலுத்தன் — புல்லியன் என்றெல்லாம் கீழ்த்தரமாய்ப் பேசிவிட்டேன். போற்றவேண்டியவரை — பொன்பீடத்தே ஏற்றிப் புகழவேண்டியவரை ஏளனம் செய்த நானே புல்லியன்! புனிதமற்றவன்! கண்ணிருந்தும் கருத்தாளமற்ற கபோதி! ஆ!

அவரைக் கொன்றொழிக்க இந்தக் கரங்களால் வாளை எடுத்து ஓங்கினேனா? சீ... (வாளை வீசுகிறான்) நான் பெரும் தவறிழைத்து விட்டேன். மன்னிக்க முடியாத குற்றத்தைப் புரிந்துவிட்டேன். இனியிதற்கு விமோசனமே இல்லை. விமோசனமே இல்லை...

[கற்சிலையென இருக்கிறான்.]

**வீரன் 2 :-** இரத்த வெள்ளம் பீறிடும் என்றல்லவா எண்ணினேன்.

**வீரன்:-** கற்சிலையாகிவிட்டாரே!

**இரும்:-** (நறுக்காக) வீரா!

**வீரன்:-** அரசே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்:- புதிய சாமரையை காலம் தாழ்த்தாது எடுத்துவா.

வீரன்:- இதோ இக்கணமே...

இரும்:- ஓதுவார்!

ஓதுவார்:- அரசே!

இரும்:- தீந்தமிழ்ப் பாடல் ஒலிக்கட்டும்!

[ஓதுவார் பாடுகிறார்; மன்னன் கவரி வீசுகிறார்.]

வீரன்:- சின வேங்கைப் புலிபோல இருந்த மன்னர் இப்போது சிரம் தாழ்த்தி நிற்கிறார்.

வீரன் 2 :- கோபக் கனல் வீசிய முகத்தில் அன்பு ஒளி பிரகாசிக்கிறதே!

[புலவர் மெல்லென எழுகிறார்.]

மோசி:- என்ன! என்ன இது? நான் காண்பது என்ன? என் கண்களை நம்பமுடியவில்லையே! அரசே! அரசே! தாங்கள் இந்த அற்பனுக்கா பணிவிடை புரிகிறீர்கள்? செங்கோல் தாங்கும் கரங்களால், கவரி தாங்கி எனக்கு வீசுகிறீர்களா? குற்றமிழைத்த எனக்கா இத்தகைய வரவேற்பு? இத்தகைய கௌரவம்?

நான் பெருந் தவறு இழைத்துவிட்டேன் அரசே! குற்றமற்றவர்களாற் கட்டப்பட்டு மயிற் பீலியினால் தொடுக்கப்பட்டு, பொற்றாமரைத் தளிருடன் கூடிய வீரமுரசு கொலு வைக்கவேண்டிய புனித கட்டிலை — பூக்கள் நிரம்பிய கட்டிலை என் செய்கையாற் களங்கப்படுத்திவிட்டேன். அரசே! களங்கப்படுத்திவிட்டேன். இச்செய்கை உங்களை உதாசீனம் செய்வதாய் அமைந்துவிட்டது.

(மண்டியிட்டு) "மன்னவா! இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்பதற்கமையவா இந்தத் தண்டனை? வேண்டாம் மன்னவா வேண்டாம். என்னை உங்கள் உடை வாளால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டுங்கள். வேண்டுமானால் அணு அணுவாகச் சாக்கடியுங்கள். அப்படியானால்தான் நிம்மதியுண்டு அரசே நிம்மதியுண்டு. தயங்காதீர்கள்...

இரும்:- பைந்தமிழ்ப் புலவர் ஒருவருக்குச் சாமரை இரட்டும் பேறுபெற்ற யான் உண்மையில் பாக்கியவானே. என்வாழ்நாளில் இன்றுதான் ஒரு அரிய நற்பணிபுரிந்தேன். அவசரபுத்தியால் உங்களுக்கு ஊறு செய்ய எண்ணினேன். என்னைத் தாங்கள்தான் மன்னிக்க வேண்டும்.

மோசி:- மன்னவா! தங்களைப் போன்ற தமிழ் மகனை — தமிழ்ப் பற்றுமிக்க மேல் மகனை — புலவர்களைப் புரந்திடும் புரவலனை நான் கண்டதில்லை. கவரி வீசிய காவலா! நின்கொற்றம் நீடூழி வாழ்க! நின் தமிழ்ப் பற்று என்றென்றும் நின்று நிலைத்திடுக.

பாட்டு:-

கவரி வீசிய காவலா!
கண்ணியம் மிக்கநல் மன்னவா!
கற்றவர் போற்றும் வீரவா!
காத்தெமை நீடு வாழ்கவே!

திரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் இதர நூல்கள்

இறுதிப் பரிசு (நாடகம்)

நாடகம் (ஓரங்க நாடகம்)

கூப்பிய கரங்கள் (ஓரங்க நாடகம்)

பக்தி வெள்ளம் (ஓரங்க நாடகம்)

அச்சில் :

நிறைவு தந்த " நிறைகுடம் "

(25 தடவைகள் மேடையேறிய நாடகம் பற்றிய அநுபவங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org